# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2024
## பயிற்சி வினாத்தாள் - 08

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOL AND FOR THE AWARD OF BURSARIES, 2024
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

**பத்திரம் - I** **1 மணித்தியாலம்**

பெயர்/சுட்டெண் :- ...............................................................................

பாடசாலை :- ...............................................................................

❖ **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்**


- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>( வகுப்பாசிரியர் )<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | ..........................................<br>பெயர்<br>..........................................<br>ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>( ........................................ )<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ..........................................<br>பெயர்<br>..........................................<br>ஒப்பம் |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | ..........................................<br>பெயர்<br>..........................................<br>ஒப்பம் |
| **அதிபர்**<br>மேற்பார்வை செய்தேன். | |
| **வலய / மாகாண மேற்பார்வையாளர்** | |

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) 


பின்வரும் படம் தெளிவுபடுத்தும் விடயங்களைக் கொண்ட சரியான கூற்றைத் தெரிவு செய்க.

01) இரண்டு சிறுமிகளும் நான்கு சிறுவர்களும் வேலை செய்கின்றனர்.

02) மூன்று மேசைகளும் கதிரைகள் சிலவும் காணப்படுகின்றன.


03) வெண்பலகையில் கணிதச் செய்கைகள் எழுதப்பட்டுள்ளன.

02) தரப்பட்ட படத்தில் விடுபட்ட A , B பகுதிகளுக்கு வரும் துண்டுகளைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




01) 

02) 

03) 

03) பின்வரும் வாக்கியத்திலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களடங்கிய விடையைத் தெரிவு செய்க.

கடற்கரையில் மாலை வேளையில் சிறுவர்கள் ............. மணல் வீடுகள் கட்டி விளையாடினார்கள். அப்போது கடலலைகள் ................ இடித்துக் .......................

| | | |
|---|---|---|
| 01) பல | நீரினால் | சரித்தனர் |
| 02) சிலர் | அவற்றை | கரைத்தன |
| 03) சிலர் | அதை | அழித்தன. |


04) தரப்பட்டுள்ள இலக்க உருவில் கீழ்நோக்கி அல்லது கிடையாக அல்லது அடுத்தடுத்து இருக்கும் இரு இலக்கங்களின் கூட்டுத்தொகை 7 ஆக இருக்கும் சந்தர்ப்பங்கள் எத்தனை?

| | | |
|---|---|---|
| 4 | 1 | 6 |
| 3 | 5 | 2 |
| 2 | 6 | 5 |

01) 3

02) 4

03) 5

05) 


இவ்வுருவின்படி மாலதி நிற்பது கிழக்குத் திசை எனின், டிருக்சி நிற்பது எவ்விரு திசைகளுக்கு இடையிலாகும்.

01) வடக்கு - மேற்கு

02) தெற்கு - மேற்கு

03) தெற்கு - கிழக்கு




kalvi.lk


06) வியாபாரி ஒருவர் பென்சிலொன்றை ரூபாய் 9.00 இற்கு வாங்கி ரூபாய் 15.00 இற்கும் அழிறப்பர் ஒன்றை ரூபாய் 5.00 இற்கு வாங்கி ரூபாய் 9.00 இற்கும் என்ற அடிப்படையில் விற்பனை செய்கிறார். ஒரு நாளில் குறித்த இரு பொருட்களிலும் குறித்த எண்ணிக்கையை விற்றதன் மூலம் ரூபாய் 88.00 இனை இலாபமாகப் பெற்றார். எனின், அவர் விற்ற அழிறப்பர்களினதும் பென்சில்களின் எண்ணிக்கைகள் முறையே

01) 10 , 8      02) 5 , 10      03) 8 , 9

07) ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம் வினாக்களைக் கேட்கிறார். முதலாவது வினாக்களுக்கு நான்கில் ஒரு பங்கு மாணவர்களும், இரண்டாவது வினாவிற்கு நான்கில் மூன்று பங்கு மாணவர்களும், மூன்றாவது வினாவிற்கு வகுப்பில் உள்ள அரைவாசி மாணவர்களும் பதில் கூறினார்கள். அவ்வாறெனின், வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையாக இருக்கக் கூடிய விடை யாது?


01) 46      02) 60      03) 50

08) உருக் கோலத்தை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




......?.....


01)



02)



03)



09) ஒன்று தொடக்கம் எட்டு வரை இலக்கமிடப்பட்ட புத்தகமொன்றில் இருந்து ஒரு தாள் கிழிக்கப்பட்டது. கிழிக்கப்பட்ட தாள் தவிர்ந்த ஏனைய பக்க இலக்கங்களின் கூட்டுத்தொகை 25 ஆகும். எனின், கிழித்தெடுக்கப்பட்ட தாளின் பக்க இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

01) 07      02) 15      03) 11

10) சனிக்கிழமைக்கு நான்கு நாட்கள் முந்திய நாளானது நாளை மறுதினம் ஆகும். அவ்வாறெனின் இன்று என்ன கிழமையாகும்?

01) ஞாயிற்றுக்கிழமை      02) திங்கட்கிழமை      03) சனிக்கிழமை

11) X இன் உடைய இரண்டு ஆண்பிள்ளைகள் B யும் C யும் ஆவார். Y இன் உடைய இரண்டு பெண் பிள்ளைகள் D யும் E யும் ஆவார். E க்கு C என்ன உறவு முறை உடையவர்?

01) சித்தப்பா      02) மாமி      03) மாமா




kalvi.lk

12) விடுமுறையொன்றின் போது அப்பா வெளிநாட்டிலிருந்து வீட்டிற்கு வந்தார். இன்று புதன்கிழமையாகும். நாளை 18 ஆம் திகதியாகும். ஞாயிற்றுக்கிழமை மீண்டும் வீட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வார். அப்பா செல்லும் திகதி யாது?

01) 22 ஆம் திகதி 02) 20 ஆம் திகதி 03) 21 ஆம் திகதி

13)






அருகிலுள்ள உருவிற்கேற்ப 1 = 14 உம், 7 = 5 உம், 3 = 1 உம் ஆகும். எனின், 4 = .....?...... இன் பெறுமானம் யாது?


01) 11 02) 15

03) 8


14) சம பக்கங்களையுடைய இரு முக்கோணிகளைக் கொண்டு ஆக்க முடியாத உரு எது?

01) 

02) 

03) 

15) எண்கோலங்களை அவதானித்து ? இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




01) 27

02) 24

03) 31

16) குறித்த ஒரு தினம் மாலை நேரம் வகுப்பினை முடித்துச் சென்ற மாலா தனது வலது புறம் வானவில்லைக் காண்கிறாள். அவள் முன்னோக்கிச் செல்லும் திசை யாது?

01) கிழக்கு 02) வடக்கு 03) தெற்கு


17)

வாசனை எதுவும் எனக்கு இல்லை
எனது வடிவம் என் இருப்பிடமே
புவியில் அனைத்தின் ஆதாரம் நான்
கோபம் கொண்டால் கொடுப்பதில்லை மன்னிப்பு

இப் பாடலின் கருத்து மிகச் சரியாகப் பொருந்துவது

01) நீருக்கு 02) வெளிச்சத்துக்கு 03) காற்றுக்கு

18)



இதில் இனங்காணக் கூடிய முக்கோணிகள் எத்தனை?


01) 6 முக்கோணிகள்

02) 12 முக்கோணிகள்

03) 10 முக்கோணிகள்



kalvi.lk

19) 

உருவானது கம்பித் துண்டுகளை வெட்டி சதுரவடிவிலான ஜன்னல் செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பயன்படுத்திய கம்பியின் நீளம் 42m எனின், இவ்வுருவைச் சுற்றியுள்ள நீளம் யாது?

01) 24m 02) 18m 03) 28m

20) காண்டீபன், திலக், வசந்தன் ஆகியோர் 120km தூரத்தை ஒரே இடத்திலிருந்து காரில் புறப்படுகிறார்கள். அவர்கள் புறப்பட்ட நேரங்களும் சென்ற கதியும் ( சீரான கதியில் ) தரப்பட்டுள்ளன.

| நபர்கள் | புறப்பட்ட நேரம் | கதி ( km ) |
|---|---|---|
| காண்டீபன் | மு. ப 8.00 | 20 |
| திலக் | மு. ப 9.00 | 50 |
| வசந்தன் | மு. ப 10.00 | 40 |

இவர்கள் சேர வேண்டிய இடத்தை என்ன ஒழுங்கு முறையில் சென்றடைந்தனர் என்பதைச் சரியாகக் குறிக்கும் விடை

01) திலக் , வசந்தன் , காண்டீபன்

02) வசந்தன் , திலக் , காண்டீபன்

03) திலக் , காண்டீபன் , வசந்தன்


21) அரைக்கும் ஆலை ஒன்றில் மூன்று இயந்திரங்கள் இயங்கிய நேரங்கள் தரப்பட்டுள்ளன.

- மா அரைக்கும் இயந்திரம் - பி. ப 3.00 மணி - பி. ப 3.40 மணி வரை
- நெல் குற்றும் இயந்திரம் - பி. ப 2.45 மணி - பி. ப 4.00 மணி வரை
- தூள் அரைக்கும் இயந்திரம் - பி. ப 3.15 மணி - பி. ப 4.10 மணி வரை

இம்மூன்று இயந்திரங்களும் ஒன்றாக இயங்கிய நேரம் யாது?

01) 1 மணி 25 நிமிடங்கள் 02) 40 நிமிடங்கள் 03) 25 நிமிடங்கள்

22)




இப்படத்திலுள்ள எண்களின் கோலத்தை அவதானித்து A , B இடங்களுக்கு வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

01) 6 உம் , 12 உம் 02) 6 உம் , 10 உம் 03) 14 உம் , 16 உம்



kalvi.lk

**தரப்பட்ட தகவலைக் கொண்டு 23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கான விடையினைத் தெரிவு செய்க.**

- கமலி 15 நிமிடங்களில் 8 மாலைகள் கட்டுவாள்.
- விமலி 12 நிமிடங்களில் 10 மாலைகள் கட்டுவாள்.
- சாமந்தி 20 நிமிடங்களில் 16 மாலைகள் கட்டுவாள்.


23) மேற்படி தகவல்களின்படி குறைந்த நேரத்தில் கூடுதலான மாலைகள் கட்டுபவர் யார்?

01) விமலி    02) கமலி    03) சாமந்தி

24) இவர்கள் மூவரும் அரை மணித்தியாலத்தில் கட்டிய மாலைகளின் மொத்த எண்ணிக்கை

01) 60    02) 84    03) 65


25) தரப்பட்ட திண்ம உருக்களில் உச்சிகளின் எண்ணிக்கை குறைந்ததிலிருந்து கூடியது வரை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கிலமைந்த விடை எது?




P    Q    R    S    T

01) R T P S Q    02) R T P Q S    03) R T S P Q


26)



01)    02)    03)



27)



அருகிலுள்ள திண்ம உருவானது ஒரேயளவான சதுரமுகிகளையும் ஒரேயளவான கனவுருக்களையும் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. இதில் 16 சதுரமுகிகள் உள்ளன. எனின், இவ்வுருவிலுள்ள கனவுருக்கள் எத்தனை?

01) 6    02) 5    03) 4

28) பின்வரும் கோவைகளுள் சரியான கோவை எது?

01) 21 + 19 + 22 + 18 + 20 = 100

02) 15 + 15 + 20 + 20 + 20 = 100

03) 15 + 15 + 15 + 20 + 20 = 100



kalvi.lk

29) பின்வரும் வாக்கியம் கருத்துள்ளதாக இருக்க செய்ய வேண்டிய மாற்றத்தைக் குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.

**தபாலகத்தில் காசோலையை மாற்றிப் பணம் பெற்றார்**

01) தபாலகம் என்பதற்குப் பதிலாக ஆலயம் என இடுதல்.

02) தபாலகம் என்பதற்குப் பதிலாக வங்கியென இடுதல்.

03) காசோலை என்பதற்குப் பதிலாக கடதாசி என இடுதல்.

30) எழுத்துக்கள் குறிக்கும் இலக்கப் பெறுமதிக்கு அமைய கணிதச் செய்கைக்குரிய குறியீட்டு விடையைத் தெரிவு செய்க.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | D | Y | O | R | S | B | C | P | T |

P T - D Y = .......?.......

01) P B 02) B S 03) S B

**தரவினை அவதானித்து 31 ஆம், 32 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**

பாடசாலை நிகழ்வொன்றிற்கு வருகை தந்த ஆண்களுக்கு நீல நிறத்தாலும் பெண்களுக்கு சிவப்பு நிறத்தாலும் இலச்சினை வழங்கப்பட்டது. இதில் மாணவர்களுக்கு வட்டவடிவான இலச்சினையும் ஆசிரியர்களுக்கு சதுர வடிவான இலச்சினையும் வழங்கப்பட்டது.

31) ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இலச்சினை

01) வட்ட வடிவ சிவப்பு நிறத்தாலானது

02) சதுர வடிவ சிவப்பு நிறத்தாலானது

03) சதுர வடிவ நீல நிறத்தாலானது


32) பெண் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலச்சினை

01) வட்ட வடிவ நீல நிறத்தாலானது

02) சதுர வடிவ சிவப்பு நிறத்தாலானது

03) வட்ட வடிவ சிவப்பு நிறத்தாலானது

33) புத்தகசாலைக்குச் சென்ற மாணவர்கள் வாங்கிய புத்தகங்கள் தொடர்பான தகவலைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.




A - கணித புத்தகம் வாங்கியோர்

B - சுற்றாடல் புத்தகம் வாங்கியோர்

C - தமிழ் புத்தகம் வாங்கியோர்


யாதேனும் ஒரு புத்தகம் மட்டும் வாங்கியோர்

01) 59 பேர் 02) 53 பேர் 03) 37 பேர்





kalvi.lk

34) AB, CD ஆகிய புள்ளிகள் வழியே மடிக்கும் போது தோன்றும் உரு யாது?




01) 

02) 

03) 

35) ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்கள் சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

01) விளங்கிக் கொள்ளல் → பாடத்தை வாசித்தல் → விளக்குதல்

02) கதவை மூடுதல் → நித்திரை செய்தல் → பூட்டுதல்

03) காற்று வீசுதல் → குளிர்ச்சியை உணர்தல் → உடல் வெப்பம் தணிதல்

36) கருத்துள்ள வாக்கியமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

A - அல்லது சிறியதாக இருக்கலாம்

B - செய்யப்பட்டதாக இருப்பின்

C - எமக்கு செய்த உதவி

D - அதனைப் போற்ற வேண்டும்


E - தக்க தருணத்தில்.

F - பெரியதாக இருக்கலாம்

01) CBFACD 02) CFAEBD 03) CAFEBD

Education கல்வி අධ්‍යාපන

37) இதில் இனங்காணக் கூடிய சதுரங்கள் எத்தனை?



01) 18 02) 28 03) 26


38) சுதன் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அறநெறி வகுப்புக்குப் போவான் அவன் ஒரு மாதத்தில் அறநெறி வகுப்புக்குச் சென்ற திகதிகளைக் காட்டும் சரியான விடை

01) 7, 12, 19, 26 02) 7, 14, 21, 28 03) 7, 14, 19, 25

39) 120 பலாப்பழங்களைக் கொண்ட குவியலில் எட்டில் மூன்று பங்கு பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மிகுதியாக நல்ல நிலையிலுள்ள பழங்களை மூன்று நபர்கள் சமமாகப் பங்கிட்டனர் எனின் ஒருவருக்குக் கிடைக்கும் பலாப் பழங்கள் எத்தனை?

01) 25 பழங்கள் 02) 20 பழங்கள் 03) 30 பழங்கள்

40) கோலத்தின்படி A என்ற இடத்தில் வரும் எண் யாது?




01) 7

02) 10

03) 9



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2024
## பயிற்சி வினாத்தாள் - 08

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOL AND FOR THE AWARD OF BURSARIES, 2024
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024

**பத்திரம் - II** **1 மணித்தியாலம்**

பெயர்/சுட்டெண் :- ........................................................................

பாடசாலை :- ........................................................................

❖ **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்**

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>( வகுப்பாசிரியர் )<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன். | ............................................<br>பெயர்<br>............................................<br>ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>( ........................................ )<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன். | ............................................<br>பெயர்<br>............................................<br>ஒப்பம் |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன். | ............................................<br>பெயர்<br>............................................<br>ஒப்பம் |
| **அதிபர்**<br>மேற்பார்வை செய்தேன். | |
| **வலய / மாகாண மேற்பார்வையாளர்** | |

kalvi.lk

**01) பின்வரும் பந்தியை வாசித்து, பந்தியின் கீழ்க் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.**

பலாமரம் நிழல் தருகிறது. பறவைகளும் பிராணிகளும் உறைகின்றன. காற்றின் அதீத வேகத்தைக் பலாமரம் கட்டுப்படுத்துகின்றது. வேர்களோ நில அரிப்பைத் தடுத்து மண்ணின் ஈரத் தன்மையைப் பேணுகின்றன. உணவாகப் பழங்களையும் விறகாகக் கட்டைகளையும் தருகின்றது. எத்தனை பயன்கள்! இலைகள் ஆடுகளுக்கு உணவாகின்றன. வீடு கட்டவும் மரப் பொருட்கள் செய்யவும் மரத்தை உபயோகப்படுத்துகின்றோம். பலாவின் காயை இரண்டு விதங்களில் சமைக்கலாம். இதன் பழச்சுளைகளையும் கொட்டைகளையும் நீரிலோ அல்லது நீராவியிலோ வேக வைத்துத் தேங்காய்ப்பூவுடன் கலந்து உண்ணலாம். குழம்பாகவும் பலாக்காயைச் சமைக்கலாம். எனவே நன்மைகள் தரும் பலாவைப் பாதுகாப்போம்.

01. **'பயன்படுத்துகிறோம்'** என்பதைக் குறித்து வந்த சொல்லை எழுதுக.

.......................................................................................................................................

02. பலாவினால் கிடைக்கும் நன்மை ஒன்றைத் தெரிந்து எழுதுக.

.......................................................................................................................................

03. பந்தியிலுள்ள தன்மை எதிர்கால பன்மை வினைச்சொல்லொன்றை எழுதுக.

.......................................................................................................................................

04. **'உறைகின்றன'** என்ற வினைச் சொல்லால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

.......................................................................................................................................

05. பந்தியிலுள்ள உள்ளீட்டு மரபுப் பெயர் எது?

.......................................................................................................................................

06. காற்றின் அதீத வேகத்தைக் கட்டுப்படுத்தும் இயல்பு எத்தாவரத்திற்கு உள்ளதாகக் கூறப்படுகின்றது?

.......................................................................................................................................

**02) பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.**

01. தேனீக்கள் ஒவ்வொரு பூவிலும் தேனை உறிஞ்சிக் குடித்தன. (        )
02. நாங்கள் அனைவரும் பேருந்தில் வவுனியாவிற்குப் போவேன். (        )
03. காவலன் அவனைக் காட்டிலே கண்டான். (        )

**03) அ∴றிணை ஒருமைப் படர்க்கை வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.**

முயல்கள் , பட்டம் , பாடின , வந்தான் , பறக்கிறது

**04) பின்வரும் வாக்கியத்தினை ஒன்றன்பால் நிகழ்கால வாக்கியமாக எழுதுக.**

01. மான்கள் புற்றரையை நோக்கிச் சென்றன.

.......................................................................................................................................



kalvi.lk

**05) தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

01. காணப்படுகிறது / இளையோர் / இன்று / பாவனை / போதைப்பொருள் / மத்தியில் / அதிகரித்துக்

..........................................................................................................................................

..........................................................................................................................................

**06) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.**

01. நற்புகழ் என்றுமே மங்குவதில்லை

..........................................................................................................................................

02. நன்றி மறத்தல் என்றுமே கூடாது.

..........................................................................................................................................

**07) கருத்தினை நன்கு தெளிவுபடுத்தும் மரபுத் தொடரினைத் தெரிவு செய்க.**

01. வெற்றியடைதல் - ( பூசி மெழுகுதல் / கைகூடுதல் / வாகைசூடுதல் )

02. நிறைவடைதல் - ( கடன்கழித்தல் / கைகூடுதல் / எடுத்தெறிதல் )

**08) பின்வரும் வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.**

01. எல்லோரும் பேருந்தில் ஏறுங்கள் என அதிபர் கூறினார்

02. குரங்கு மரத்திற்கு மரம் தாவியது

**09) விடை எழுதுக.**

01. **தொன்மை** என்பதன் ஒத்த பதத்தினை எழுதுக. ........................................................

02. **தாறுமாறாகப் பேசாதே** இதிலுள்ள இணைமொழி எது? ........................................................

03. **பா. அ. ச** சுருக்கக் குறியீட்டின் விரிவாக்கத்தை எழுதுக.

..........................................................................................................................................

**10) பின்வரும் பந்தியில் உருவினால் காட்டப்படும் இடங்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிந்து கோடிடுக.**

ஓர் அடர்ந்த காட்டில்  வாழ்ந்து வந்தது. அதனுடன்  நண்பனாக இருந்தது. ஒரு நாள் அவை காட்டு வழியே பறந்து சென்றபோது சில  கண்டன.

01. i) காகத்திற்கு ii) ஒரு காகம் iii) ஓர் காகம்

02. i) ஒரு காகம் ii) ஓர் ஆந்தை iii) கிளிகளைக்

03. i) காகம் ii) கிளிகளைக் iii) கிளிகளிற்கு




kalvi.lk

**11) பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்தில் எழுதுக.**

01. 

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

02. 

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**12) கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

01. wearing / is / Kannan / black / a / shorts.

..............................................................................................................................

02. name? / what / father / is / your

..............................................................................................................................

**13) பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

01. Burghers :- ..............................................................................................

02. Healthy food :- ..............................................................................................

**14) 01. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

i. கெசெல் :- ...................................................................

ii. செனசுராதா :- ...................................................................

**02. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i. அது என்ன நிறம் :- ..............................................................................................

**15) நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றேழு** என்ற எண்ணுடன் மூன்றைக் கூட்டும் போது வரும் எண்ணை இலக்கங்களில் எழுதுக. ......................................

**16)** தரப்பட்ட எண்ணை இடப்பெறுமானத்திற்கேற்ப விரித்தெழுதுக.

**8639 :-** ........................ + ........................... + ........................... + ...........................

**17)** தரப்பட்ட எண்கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய எண்ணைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

...?..... , ....?..... , 40 , 47 , 54 , 61 .............. , ..............

**18)** 206 இனை 4 ஆல் பெருக்கும் போது வரும் விடை யாது? ....................................

**19)** ஒரு பாத்திரத்தில் $3l$ $275\,ml$ எண்ணெய் உள்ளது. அவ்வாறான 4 பாத்திரங்களில் உள்ள எண்ணெயின் அளவு யாது? ....................................




kalvi.lk

**20)** பூந்தோட்டமொன்றில் இரு நாட்கள் பறிக்கப்பட்ட இருவகையான பூக்கள் பற்றிய விபரம் வருமாறு

| நாள் | ரோசாப்பூ | அந்தூரியம் |
|---|---|---|
| 1ம் நாள் | 1796 | 3123 |
| 2ம் நாள் | 2468 | 860 |


i) இரு நாட்களும் பறிக்கப்பட்ட மொத்தப் பூக்கள் எத்தனை? ..................................

ii) இரு நாட்களும் பறிக்கப்பட்ட அந்தூரியப் பூக்களுக்கு இடையிலான வித்தியாசம் யாது? ....................................

**21)** 

இத் திண்ம உருவின் பெயர் யாது? ....................................

**22)** தரம் 5 மாணவர்கள் சிலர் தம்மிடம் உள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூபாய் 50.00 வீதம் 6 கொப்பிகளும் ஒன்று ரூபாய் 15.00 வீதம் 4 பென்சில்களும் வாங்கினார்கள். கொப்பிகளும், பென்சில்களும் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு? ரூபாய் ..................................


**23)** 

உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணில் எழுதுக. ....................................

**24)** 311 பேனாக்களை மூன்று பெட்டிகளில் சமனாக வைக்கப்பட்ட பின் எஞ்சியிருக்கும் பேனாக்கள் எத்தனை? ......................................

**25)** ஒரு பாத்திரத்திலுள்ள நீரினளவு 6250 $ml$ ஆகும். இவ்வளவினை லீற்றர், மில்லி லீற்றரில் எழுதுக. .......... $l$ ............ $ml$

**26)** ஒன்று ரூபாய் 98.00 வீதம், 4 வர்ணப் பெட்டிகளை வாங்கி ரூபாய் 500.00 கொடுத்தால் மீதி எவ்வளவு பணம் கிடைக்கும்? ரூபாய் .................................

**27)** 


உருவின்படி **A** க்கு **B** எத்திசையில் உள்ளார்? ......................................

**28)** மு.ப 10.25 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட கரன் பி.ப 1.10 மணிக்கு அவனது நண்பனின் வீட்டை அடைந்தான். எனின், அவன் பயணத்திற்கு எடுத்த காலம் யாது? .......... மணித்தியாலம் .......... நிமிடம்



kalvi.lk

**29)** தரம் 5 வகுப்பொன்றில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்பிரல் மாதங்களில் பிறந்த பிள்ளைகள் பற்றிய விபரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பிறந்த மாதங்கள் | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | ///// ///// |
| பெப்ரவரி | ///// ///// /// |
| மார்ச் | ///// ///// // |
| ஏப்ரல் | ///// ///// //// |

i) கூடுதலான பிள்ளைகள் பிறந்துள்ள மாதம் எது? .......................................

ii) ஏப்ரல் மாதத்தை விட மார்ச் மாதத்தில் குறைவாகப் பிறந்துள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? .......................................

**30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** குப்பைகளினை இடும் குப்பைத்தொட்டிகளின் வரிசையில் உணவுக் கழிவுகளை இடும் குப்பைத்தொட்டியின் நிறம் யாது?

01) நீலம் 02) சிவப்பு 03) பச்சை

**31)** இலங்கைக்கு உரித்தான தாவரம் பின்வருவனவற்றுள் எது?

01) இறப்பர் 02) காட்டிலுப்பை 03) தேயிலை

**32)** ஒரு வித்தினைக் கொண்ட பழம் பின்வருவனவற்றுள் எது?

01) நெல்லி 02) விளாம்பழம் 03) மங்குஸ்தான்


**33)** யுக்திய நடவடிக்கை மூலம் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொலைபேசி இலக்கம்

01) 110 02) 107 03) 118

**34)** வண்ணத்துப்பூச்சியின் எப்பருவம் தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும்?

01) குடம்பி 02) கூட்டுப்புழு 03) நிறையுடலி

**35)**



இப்பரிசோதனையின் நோக்கம் யாது?

01) எரிதலை அவதானிப்பதற்கு

02) எரிவதற்கு ஒட்சிசன் அவசியம் என்பதை அறிதல்

03) வெளிச்சத்தை அறிதல்

**36)** இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது தாதுகோபுரம் எது?

01) காலிக்கோட்டை 02) ருவன்வெலிசாய 03) தூபராமய

**37)** பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடம்பில் ஒட்டிப் பரம்பலடையும் வித்து

01) புலிநகம் 02) எண்ணை வித்து 03) காசித்தும்பை

**38)** நிதஹஸே மந்திரய என்னும் நூலை எழுதிய சிங்களத் தலைவர் யார்?

01) ஆதர் சி. கிளார்க் 02) வண. எஸ். மஹிந்த 03) கலாநிதி ரீ. பி. ஜாயா



kalvi.lk

39) 

இக்குறியீட்டின் தகுந்த விளக்கத்தைக் குறிப்பது

01) உடையக் கூடியது

02) நீர் எடுக்கக் கூடியது


03) கவனமாகக் கையாளவும்

40) தேசப் படமொன்றில் புகையிரதப் பாதையைக் குறித்துக் காட்டும் நிறம்

01) கறுப்பு 02) சிவப்பு 03) நீலம்

41) அதிவேகப் பாதைகளைத் தேசப்படத்தில் குறித்துக்காட்டப் பயன்படும் நிறமும் அதன் ஆங்கிலக் குறியீடும் முறையே

01) A , சிவப்பு 02) ஊதா , E 03) மஞ்சள் , E

42) 


இக்குறியீட்டின் கருத்து யாது?

01) இரண்டுக்கு மேல் அடுக்கத் தடை

02) இரண்டு கடித உறைகள் உள்ளன.

03) இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்

43) விவசாயிக்கு உதவுவதும் விவசாயிக்கு தீங்கு விளைவிப்பதுமான பிராணிகள் முறையே

01) மண்புழு , தேனீ 02) மண்புழு , நத்தை 03) தேனீ , வெட்டுக்கிளி

44) இறைச்சியை நவீன காலத்தில் பாதுகாப்பாக வைப்பதற்குப் பயன்படுத்தும் முறை

01) உப்பில் அமிழ்த்தி வைத்தல் 02) அவித்தல்

03) குளிரூட்டியில் வைத்தல்

45) அம்மை நோயைக் குணப்படுத்தவும் தொற்று நீக்கியாகவும் பயன்படும் தாவர இலை


01) தோடை 02) மாவிலை 03) வேப்பமிலை

46) கற்புத்தகத்தை அமைத்த மன்னன் யார்?

01) தேவநம்பியதீசன் 02) வலகம்பா மன்னன் 03) நிஸ்ஸங்கமல்லன்

47) சூரிய நமஸ்காரம் செய்யப் பொருத்தமான பொழுது எது? எனக் கருதப்படுகின்றது.

01) காலை 02) நள்ளிரவு 03) பகல்

48) 


இவ் அமைப்பின் பெயர் என்ன?

01) மின்சுழலி

02) மின்காந்தம்

03) மின்னிணைப்பு

49) 

இக் குறியீட்டின் விளக்கமாகக் கருதப்படுவது யாது?

01) அபாயம்

02) எச்சரிக்கை

03) நிறுத்தவும்

50) மூலவர்ணங்களில் ஒன்று அல்லாதது

01) மஞ்சள் 02) சிவப்பு 03) பச்சை

51) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் இறுதிப் படிநிலை எது?

01) திடசித்தம் 02) பிரார்த்தனை 03) மலர்வு



kalvi.lk

**52)** தரப்பட்ட உணவுகளில் எதனை உண்பதால் உடலில் தடிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது?

01) பலாப்பழம் 02) அன்னாசிப்பிஞ்சு 03) ஆனைக்கொய்யா

**53)** உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவுகளில் ஒன்று

01) இடியப்பம் 02) பசளிக்கீரை 03) மாஜரீன்

**54)** இலங்கையில் அரச தகவல் திணைக்களத்தை எத்தொலைபேசி இலக்கத்தை அழைத்துத் தொடர்பு கொள்ளலாம்?

01) 1919 02) 1938 03) 1954


**55)** இலைகளில் முட்கள் உள்ள தாவர இலையொன்று

01) கண்டங்கத்தரி 02) வாதமடக்கி 03) பொன்னொச்சி

**56)** கிணற்றிலிருந்து நீரள்ள உதவும் வேலையை இலகுவாக்கும் பொறி எது?

01) வாளியும் கயிறும் 02) கப்பி 03) குடமும் பானையும்

**57)**




இதில் தரப்பட்ட மரமுந்திரிகைப் பழத்திலே பழமாகக் கருதப்படுவதைக் குறிக்கும் ஆங்கில எழுத்து

01) B 02) A 03) C

**58)** சீருடை அணிந்து வேலை செய்யாத தொழிலாளி

01) ஆசிரியர் 02) பொலிஸ் 03) தாதி

**59)** குரக்கன் வித்தை ஒத்த சாயலுள்ள வித்து எது?

01) மிளகு 02) கடுகு 03) பாசிப்பயறு

**60)** அகிலன் துணிவுள்ள ஒரு சிறுவன். ஒருநாள் தந்தையுடன் விறகு வெட்டுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். விறகு வெட்டிய களைப்பால் தந்தையார் சிறிது நேரம் உறங்கி விட்டார். அகிலன் மெல்ல மெல்ல காட்டைச் சுற்றிப் பார்க்க நடந்தான். ................

இதனைத் தொடர்ந்து வரக்கூடிய சம்பவங்களை உமது கற்பனையில் ஐந்து சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்களில் எழுதுக.

( எழுவாய், பயனிலைத் தொடர்பு பேணப்படுவதோடு, எழுத்துக் கூட்டல்கள் சரியாக இருக்க வேண்டும். )

01) ..........................................................................................................................

..........................................................................................................................

02) ..........................................................................................................................

..........................................................................................................................

03) ..........................................................................................................................

..........................................................................................................................



kalvi.lk